Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி–13 | 29–07–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–161




உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12401) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு பிரகடன அறிக்கை மக்கள் அமைப்புக்களால் தேசியத்தலைவருக்கு கையளிப்பு



(அலுவலக செய்தியாளர்)

தமிழ் தேசிய மாநாட்டில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட பிரகடன அறிக்கை நேற்று தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கு வழங்குவதற்கென கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் வைத்து கையளிக் கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்கினேஸ்வரன் அவர்கள் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுக்கு கையளிக்கும் வகையில் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் பேராளர்களினால் பிரகடனத்தப்பெற்ற தமிழ் தேசிய பிரகடன அறிக்கையினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களிடம் கையளித்தார்.

மேற்படி கையளிப்பு நிகழ்வில் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளு

(IV ஆம்பக்கம் பார்க்க)



(படம்:- சோதி)

# வவுனியா புலிகளின் அலுவலகம் மீது துப்பாக்கிச்சூடு, கைக்குண்டு வீச்சு!

### போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையீடு

(செட்டிகுளம்)

**வவுனியா திருநாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகசேவை காரியாலயத்தின் மீது இனம்தெரியாதவர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டு இருப்பதாக வவுனியா மாவட்டஅரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.**

நேற்று இரவு பத்து மணியளவில் மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமது காரியாலயத்தின் மீது தாக்குதல் நடத்தி இருப்பதாக புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். காரியாலயத்திற்கு அருகாமையில் 400 மீற்றர் தூரத்தில் இராணுவ சேதனைச் சாவடி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

உந்துருளியில் வந்தவர்களே முதலில் இரண்டு கைக்குண்டுத் தாக்குதலினை நடத்தியாதாகவும் பின்னர் துப்பாக்கி பிரயோகம் செய்து

(IV ஆம்பக்கம் பார்க்க)

## மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது பொலிஸ் அதிகாரிகளின் கடமையல்ல

-யாழ்.பொலிசாருக்கு ம.உ.ஆணைக்குழு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பாதுகாப்பை பொலிசாரே உறுதி செய்ய வேண்டும் மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது பொலிசாரின் கடமை அல்ல என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் யாழ். பொலிஸ் அதிகாரியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முறையிடச்சென்ற பொதுமகன் ஒருவரை பொலிஸ்நிலையத்தில் வைத்து மற்றொரு பொதுமகன் தாக்கியபோது பொலிசார் அதனை கைகட்டி நின்று வேடிக்கை பார்த்த சம்பவம் தொடர்பான விசாரணையின்போதே பொலிசாருக்கு இலங்கை மனித உரிமைகள்

(IV ஆம்பக்கம் பார்க்க)



## ஈ.பி.டி.பி உறுப்பினர் யாழ்.இல் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி தேச விரோதக் கும்பலைச் சேர்ந்த சூரியம்பிள்ளை நிக்சன் என்பவர் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் யாழ். நகரில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஈ.பி.டி.பி கும்பலினால வெளியிடப்படும் தினமுரசு பத்திரிகையை இவர் விநியோகித்துக்கொண்டிருந்த சமயமே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்

உந்துருளி ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களே

(IV ஆம்பக்கம் பார்க்க)

## நாட்டை மீளக்கட்டியெழுப்ப சமாதானமே மிக அவசியம்

***— பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு***

இலங்கை மக்கள் அனைவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர். இலங்கையில் சமாதானம் நிலவினால் மாத்திரமே இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் கனவு நிறைவேறும். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு சங்கராஜ மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் புதிய விற்பனைக் கூடத் தொகுதியை திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற வைபவத்தில் தெரிவித்துள்ளார்.

# இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழீழத்திற்கான சுயநிர்ணய உரிமை முக்கியமானது

-அமெ.காங்கிரஸ் உறுப்பினர் டென்னி கே.டேவிஸ் கருத்து-

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழீழத்துக்கு சுயநிர்ணய உரிமை அளித்தல் என்பது முக்கிய பங்காற்றும் என்று அமெரிக்க காங்கிரசின் டென்னி கே. டேவிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டனில் நடைபெற்ற இலங்கைத்தீவின் ஆழிப்பேரலை தொடர்பான மாநாட்டில் இந்தக்கருத்துத் தெரிவிககப்பட்டது. இம்மாநாட்டில் பங்கேற்றுப்பேசிய தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு அமெரிக்காவின் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்குத் தடையாகவுள்ள சட்டச் சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் பேசிய பேராசிரியர் ஓபேர்ஸ்ட் இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும்

(IV ஆம்பக்கம் பார்க்க)

- உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய -

# சூனியப் பிரதேசத்தில் மக்களை குடியமர்த்த படைத்தரப்பு கொள்கையளவில் இணக்கம்

(வடமராட்சி)

பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் குடியேறி அண்மைய சுனாமி கடல் அனர்த்தத்தினால் மீண்டும் அகதிகளாகியுள்ள ஒரு தொகுதி குடும்பங்களை உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய சூனியப் பிரதேசத்தில் மீள் குடியேற்ற யாழ். மாவட்ட படைத் தலைமை சம்மதம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நேற்று முன்தினம் மாலை அவரது அலுவலகத்தினில் இடம்பெற்றது. பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இப்பேச்சுக்களில் யாழ். மாவட்ட மீனவ சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி. தவரட்ணம் தலைமையில் வலி. வடக்கு இடம்பெயர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இவர்களுடன் பலாலி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளும் கோப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதிக்கு மேற்காக உள்ள அரச காணிப்பகுதியில் அச்சுவேலி மற்றும் கீரிமலை வீதிகளிற்கிடையே உள்ள சூனியப் பிரதேசத்திலேயே முதற்கட்டமாக இடம்பெயர்ந்து சுனாமியால் தற்போது பாதிக்கப்பட்டுள்ள 500 குடும்பங்களை மீளக் குடியேற்ற , கொள்கை அளவில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வெல்லைப் பகுதியினுள் கடற்கரையோரமாக அடங்கியுள்ள அரச காணிகளே இவ் 500 குடும்பங்களிற்கும் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது. அக்காணிகளில் முதலில் 300 சதுர அடி பரப்பளவு கொண்ட தற்காலிக குடியிருப்புகளை உதவி அமைப்புக்கள் மூலம் அமைத்து வழங்குவதெனவும், அப்பணிகளில் ஏற்படும் முன்னேற்றம் தொடர்பில் அங்கு நிரந்தர குடியிருப்புகளை அமைத்து வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பலாலி, மயிலிட்டி மற்றும் தையிட்டி கரையோரக கிராமங்களில் இருந்து உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வெளியேற்றப்பட்ட மக்கள், தம்மை தொழில் வசதிகளை கருத்தில் கொண்டு இச்சூனியப் பிரதேசத்திலாவது மீளக் குடியேற அனுமதிக்குமாறு கோரி வந்திருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (27)

## மன்னாரில் நடைபெறவுள்ள தமிழ்இலக்கியவிழா

வடக்குகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள தமிழ்இலக்கியவிழா 2005 ஒக்டோபர் மாதம் முதலாம் இரண்டாம்,மூன்றாம் திகதிகளில் மன்னாரில் இரவு -பகல் நிகழ்ச்சியாக நடைபெறவிருக்கிறது.

காலையில் நடைபெறும் ஆய்வரங்கு “20 ஆம் நூற்றாண்டின் ஈழத்து தமிழ்இலக்கியம் ஒரு மதிப்பீடு” என்னும் கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.இவ் ஆய்வரங்கில் பேராளர்களாகப் பங்குபற்ற விரும்பும் ஆர்வலர்கள் குறிப்பாக வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் தங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஓகஸ்ட்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களைத் தந்து சிரமத்தைத் தவிர்க்கஉதவுமாறும், தங்குமிடவசதியும், உணவும் எம்மால் வழங்கப்படும் என்றும் தொடர்புக்கு உதவிப்பணிப்பாளர் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்வி அமைச்சு,வடக்குகிழக்கு மாகாணம், திருகோணமலை 026-2220036 என்ற தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்துமாறும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

### கணனி வேலைக்கு ஆள்தேவை

Adobe Photo Shop வேலை தெரிந்த நிரந்தர, பகுதி நேர வேலைக்கும் இதில் ஆர்வமுடன் பழகவிரும்புபவர்களும் சுய விபரக் கோவையுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். யாழ் ஒளி (K.S.R PHOTOS) இல.05, கனகபுரம் தெரு. கிளிநொச்சி (சந்தைக்கருகில்) (6397)

### தவறிவிட்டது

விஸ்வநாதன் கோபிநாத் என்பவரது அடையாள அட்டை (840554732V), நிரந்தர பயண அனுமதி அட்டை என்பன தவறவிடப்பட்டுள்ளது, கண்டெடுத்தவர்கள் பாரஊர்திச் சங்கம் ஊர்தி சுத்திகரிப்பு நிலையம் திருமுறிகண்டி அல்லது சர்வதேச தொலைத் தொடர்பு சேவை முறிகண்டி (T.P 021-2285053) எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர் (சி.12464)

### காணி விற்பனைக்கு உண்டு

மல்லாவி நீதிமன்றத்திற்கு அருகாமையில் 1.1/2 ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்கு உணடு. வீடு கட்டலாம் தொடர்புக்கு:- க.மார்க்கண்டு இல, 2 D மல்லாவி, (சி.6010)

மல்லாவி கலைப்பிரியர்கள், ஆர்வலர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளை நிறைவு செய்ய, ஆரம்பமாகவிருக்கிறது,

## தமிழீழ நுண்கலைப் பிரிவின்

## மல்லாவி நுண்கலைக் கல்லூரி

*ஈழத்தின் புகழ் பூத்த பிரபல கலைஞர்கள் பலரும் போதனாசிரியர்களாகக் கடமையாற்ற இருக்கின்றார்கள்*

*எங்கே? எப்போது? எவ்வாறு அனுமதி எடுப்பது? என்னென்ன கலைப்பிரிவுகள் ஆரம்பமாகின்றன?*

*அறிவதற்கு, நாளைய ஈழநாதம் பாருங்கள்.*

(சி.12458) தமிழீழ நுண்கலைப் பிரிவினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு:- 27 - 07 - 1964

வீரச்சாவு:- 29 - 07 - 1995

தானைத் தலைவன் வழியில்
தளராது உறுதியுடன்
களம் பல கண்டு
காவியமான வளர்மதியே!
ஆண்டு பத்து ஆனாலும்
உன் கனவு நனவாகும் நாள்
வெகுதூரம் இல்லை.

கப்டன்-நிசா / வளர்மதி

கனகரத்தினம் ஐமுனா
கருவாக்கேணி, வாழைச்சேனை. (சி.12387)

தகவல்:-
தந்தை.
அன்புச்சோலை மூதாளர் பேணலகம்.
கனகபுரம்.

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 | 19 |
| 10 | 06 |
| 1963 | 2005 |



### அமரர்- நல்லதம்பி- தவராசா (இராசு)

(சொந்த முகவரி -7ஆம் வட்டாரம் . புதுக்குடியிருப்பு
தற்போதைய முகவரி -லூசியம் -லண்டன்)
திதி துவதசி -29.07-2005

ஐயெட்டு நாட்கள் ஓடி மறைந்தாலும்
வாய்விட்டழும் நாள் விட்டின்னும் போகவில்லை
உங்கள் நினைவலைகள் விட்டெம்மை நீங்காது
புாவியர் கொடுமையால் பாதியில் பிரிந்தீரோ ஆவிதான்
பிரிந்து அந்தரித்தபோது யாரை நினைத்தாயோ
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

*29. 7. 2005 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் 41 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.*

க.தியாகராசா,
மலரகம்,
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:-
மனைவி,தந்தை,
சகோதரர்கள்
மஞ்சான்மார், மருமக்கள்.

(சி.12388)

# தமிழீழப் போக்குவரவுக்கழகம்

# பயணியர் பேருந்துப் புதியபணி

கிளிநொச்சி அரச அதிபரின் வேண்டுகைக்கு அமைவாக அரச பணியாளர்களின் நலன் கருதி 01.08.2005 ஆம் நாளிலிருந்து இப் போக்குவரவுப்பணி தொடங்கப்படுகிறது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### பூநகரி~கிளிநொச்சி~புளியங்குளம்

நேர ஒழுங்கு:-

| ஆலடி | பூநகரி | தம்பிராய்ச்சந்தி | நல்லூர் | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06.30 | 06.40 | 06.55 | 07.10 | 07.50 | 08.10-08.30 | 08.50-09.10 | 09.45 | 10.30 |

### புளியங்குளம்~ கிளிநொச்சி~பூநகரி

நேர ஒழுங்கு:-

| | புளியங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | நல்லூர் | தம்பிராய்ச்சந்தி | பூநகரி | ஆலடி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | 02.30 | 03.15 | 03.50-04.10 | 04.30-04.45 | 05.05 | 05.45 | 06.00 | 06.15 | 06.25 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.12460)

# எங்கள் விடியலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முகங்கொடுக்க அனைவரும் தயாராக இருப்போம்

## -தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் க.வே.பாலகுமாரன் அறைகூவல்



**நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எம் கரங்களைக் கோர்த்து எங்கள் விடிவிற்கான அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்கத்தயாராக இருக்கவேண்டும். தமிழ்த்தாயினுடைய கரங்களிலேயே தமிழ்பேசும் மக்கள் இணைந்திருக்கும்போது தமிழ்த்தாயினுடைய அந்த மணி மகுடத்தை எங்கள் தேசியத்தலைவர் சூட்டும் காட்சியை நாங்கள் பார்க்கப்போகிறோம். அதற்கு முன்னால் நாங்கள் முள் மகுடம் தரிப்பதற்கும் எங்கள் கையைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுமென விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்று ஒருநாள் அருணாசலம் ஐயா சொன்னார் "இனிமேலும் ஒரு சிங்களத்தலைவனை தமிழன் நம்பினால் அவனது மூளை பழுதாகத்தான் இருக்கவேண்டும்" என்று. எமது தேசியத்தலைவர் ஒரு முறை சொன்னார் " பலவீனப்பட பலவீனப்பட சிங்களவன் ஏறி ஏறிப் பாய்வான். நான் ஒரு பொழுதும் பலவீனமான மக்கள் கூட்டத்தைக் கொண்டவனாக இருக்க விரும்பவில்லை" என்று. என்றைக்கு இந்த தமிழீழச்சிக்கல் என்று சொல்லக் கூடிய இனச்சிக்கல் தீருகின்றதோ அன்றைக்கே உண்மையான விடியலை சிங்கள மக்கள் அனுபவிப்பார்கள்.

பண்டா செல்வா ஒப்பந்தம் கிளித்தெறியப்பட்டபோதே இந்தத் தேசம் இரண்டாகக் கிழித்தெறியப்பட்டதென எமக்குள் உறைக்கவில்லை.

1965ஆம் ஆண்டு டட்லி-செல்வா ஒப்பந்தம் பற்றி திருநாவுக்கரசு சொல்லுகிறார். அது தமிழ்மக்களுக்குச் செய்யப்பட்ட துரோகம் என்று நான் அப்படி சொல்லவிரும்ப வில்லை. அப்பிடியாவது தமிழ் மக்களுக்கு ஒருதீர்வை பெற்றுக்கொடுக்க நினைத்து அந்தப் பெருந்தகை மாவட்டசபை உடன்பாட்டிற்குப் போயிருக்கலாம். ஆனால் இன்றைய வார்த்தையிலே அது சமஷ்டிக்குச் செய்யப்பட்ட துரோகமாக ஆய்வாளர்கள் சொல்லலாம் அதை விடுவோம்.

1976 இலே தமிழீழப் பிரகடனம் செய்யப்படுகிறது. அதன் பின் தந்தை செல்வா சொன்னார் நாம் எனி சமஷ்டி பற்றிப் பேசமாட்டோம் அதைக் கேட்கமாட்டோம். சிங்களவர்கள் நல்லவர்கள் அதனைத் தருவார்கள் என்று அதற்குப்பின்னால் நான் இதைப்பற்றி சொல்ல என்ன இருக்கிறது என சிந்தித்துப்பாருங்கள்.

சிங்களத்திலே ஒரு பழமொழி இருக்கிறதாம். எனக்குத் தெரியாது."சித்திரத்திலே வரைந்த தமிழனையும் நம்பாதே" என்று. பாருங்கள் எவ்வாறு பழமொழி இருக்கிறதென. ஆகவே எங்களுக்கான விதி தெளிவானது. அது எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது உங்களது கரங்களாலே எழுதப்பட்டுக் கொண்டிருப்பது நங்கள் செய்த பாக்கியமா? இல்லையா? என்பது இன்னும் சில காலங்களில் தெளிவாகத் தெரிந்துவிடும்.

பேசுவது சுலபம் செய்வது கடினம். தலைவர் அதிகம் பேசுவது கிடையாது. இதுவரை எமது தேசியத்தலைவர் அமைதி பற்றியோ, பேச்சுவார்த்தை பற்றியோ, போரைப் பற்றியோ எது பற்றியும் பேசியது கிடையாது. நாங்களும் பேசுவதைக் குறைத்துக் கொள்வோம். எங்கள் மக்கள் பேச்சுக்களை விரும்புவதும் கிடையாது. எங்கள் மக்கள் எல்லோரும் தெளிவான அரசியல் ஞானிகளாக மாறிவிட்டார்கள். ஆகவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எம் கரங்களைக் கோர்த்து எங்கள் விடிவிற்கான அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

நான் நிச்சயமாக சொல்லுகிறேன். இந்தத் தேசம் நிச்சயமாக விரைவில் விடியும் தமிழ்த் தாயினுடைய கரங்களிலே தமிழ் பேசும் மக்கள் இணைந்திருக்கும்போது தமிழ்த்தாயினுடைய அந்த மணி மகுடத்தை எங்கள் தேசியத்தலைவர் சூட்டும் காட்சியை நாங்கள் பார்க்கப் போகிறோம். அதற்கு முன்னால் நாங்கள் முள் மகுடம் தரிப்பதற்கும் எங்கள் கைகளைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு.வாவியில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு வாவியில் இருந்து நேற்று முன்தினம் மாலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.இவர் தொடர்பான விபரங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை. மட்டக்களப்புப் பொலிசார் இந்தச் சடலம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சர் குடும்பங்களின் சட்டவிரோத செயல்களுக்கு துணை போக வேண்டாம்

### - அமைச்சர் பாதுகாப்புப் பிரிவுப் பணிப்பாளர்

(கொழும்பு)

அமைச்சர்களின் குடும்பத்தவர்களதும், உறவினர்களதும் சட்ட விரோத செயல்களுக்கு துணைபோக வேண்டாம் என அமைச்சர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் உப்பாலி குமாரசிறி தகவல் வழங்குகையில் அமைச்சர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அமைச்சர்களின் பாதுகாப்பிற்கு மாத்திரமே நியமித்திருப்பதாகத் தெரிவித்தார். தொழில் மற்றும் வெளிநாட்டு பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் கொழும்பு நட்சத்திர விடுதியில் பொலிசாரைத் தாக்கியபோது அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினரும் அங்கிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் மறுத்துள்ளார். இருப்பினும் கடந்த சனிக்கிழமை இரவு சம்பவம் இடம்பெற்றபோது அமைச்சர்களின் பாதுகாப்புப்பிரிவு அதிகாரிகள் இருந்ததாக சோதனைகளில் ஈடுபட்ட போதைப்பொருள் தடுப்பு பொலிஸ் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். நட்சத்திர விடுதியில் பொருத்தப்பட்ட வீடியோ கமராவின் பதிவுகளைக் கொண்டு அது குறித்த பரிசீலனைகள் இடம்பெற்றுவருகின்றன (32)

## இல.இல் இனி ஒரு யுத்தம் வராது; அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை

இலங்கையில் இனி ஒரு யுத்தம் வராது என்று சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டெட் நம்பிக்கை தெரிவித்துள்ளார். கொழும்பு அமெரிக்கமையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் ஆற்றிய உரையில் .இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் அசாதாரண நிலைமையை முடிவுக்கு கொண்டு வந்து யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர சிறிலங்கா அரச தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை நடாத்த வேண்டும். அமெரிக்க சட்ட விதிகளின்படி பொதுக்கட்டமைப்புக்கு அமெரிக்க அரசு நிதி அளிக்க இயலாது.ஆனால் இலங்கை முழுமைக்கும் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை அமெரிக்க அரசு தனது சொந்த மேற்பார்வையிலேயே மேற்கொள்ளும்.

பொதுக்கட்டமைப்பு என்பது நிதி விடயத்திற்கு மட்டுமல்ல. நிதிவிடயத்திற்கு மட்டுமே பொதுக்கட்டமைப்பு என்றால் பொதுக்கட்டமைப்பு செயலற்றதாகிவிடும். இந்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசும், தமிழீழவிடுதலைப் புலிகளும் நிறைவேற்றியுள்ளனர்.

இலங்கையில் இனி ஒரு யுத்தம் நடைபெறாது.யுத்தம் நடைபெறுவதை இருதரப்பினரும் விரும்பவில்லை.அமைதி முயற்சிகள் தோல்வியடைந்தால் வளர்ச்சிப் பணிகள் எதுவும் மேற்கொள்ள இயலாது. சிறிலங்காவில் அமைதி நிலையும் நீடிக்காது என்றார் அவர்.

## மேர்வின் சில்வாவின் மகன் விடுதலை — பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் விசனம்

(கொழும்பு)

போதைப் பொருள் தடுப்புப பிரிவினரைத் தாக்கியதாகக் கைது செய்யப்பட்ட பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா விடுதலை செய்யப்பட்டது குறித்துப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் விசனமடைந்துள்ளனர்.இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் மாஅதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர்கள் மத்தியில் வெளியிட்ட செய்திக்குறிப்பு குறித்தும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மேர்வின் சில்வாவின் மகன் தொடர்பான சம்பவத்திற்கு உரிய ஆதாரம் எதுவும் இல்லை என்று பொலிஸ்மா அதிபரால் தெரிவிக்கப் பட்டுள்ளது. போதுமான ஆதாரங்கள் இல்லாததாலேயே மாலக சில்வாவை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் விடுதலை செய்ததாகவும் அவர் கூறியுள்ளார். பொலிஸ்மா அதிபரின் இந்தச் செயற்பாடுகளுக்கு போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஊடகத்துறையினரை இழிவாகப் பேசியதற்காக ஊடகங்களால் அமைச்சர் மேர்வின் சில்வா கடும் கண்டனத்திற்குள்ளாகியுள்ள நிலையில் பொலிசார் இந்த வழக்கில் மென்மைப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் சாடியுள்ளனர்.

## சி.சு.க—ஐ.தே.க இடையே இரகசிய உடன்படிக்கை!

### -ஜே.வி.பி யினர் விசனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் இரகசிய உடன்படிக்கையொன்று காணப்படுவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. சில விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட்டுவருவதாக மேல்மாகாண சபைக்கான ஜே.வி பியின் தலைவர் வர்ண டீப்தி ராஜபக்ஷ கூறினார்.

மேல் மாகாணசபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேயை மீண்டும் முதலமைச்சராக்கியமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தமொன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மஹர பிரதேசசபை முதல்வர் டீ.சீ.ஆர்.வீரசேகர மீது 11 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தாகவும், எனினும் அவரே மீண்டும் மஹர பிரதேசசபையின் முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தமக்கு சந்தேகத்தைத் தோற்று வித்திருப்பதாகவும் வர்ண டீப்தி ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

## பறவைக்காய்ச்சல் பரவும் அபாயம்!

பறவைக்காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக மிக அவதானமாக இருக்கும்படி உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கை உட்பட ஏனைய நாடுகளுக்கு அறிவித்துள்ளது.

இந்தோனேஷியா உள்ளிட்ட பல ஆசிய நாடுகளில் இந்நோய் பரவியுள்ளதாகவும், இந்நோயின் தாக்கம் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும்படி இலங்கை சுகாதார திணைக்களத்திற்கும், கால்நடை வைத்தியர்களுக்கும் விசேடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனியார் ஊடகங்களின் செயற்பாடுகளால் சிறிலங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

### - சிறிலங்கா முப்படை அதிகாரிகள் கூட்டத்தில் சனாதிபதி

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக தனியார் ஊடகங்கள் செயற்படுவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாடியுள்ளார். கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முப்படை அதிகாரிகள் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தனியார் ஊடகங்களில் குறிப்பாக இராணுவ ஆய்வாளர்கள் பலர் இராணுவம் குறித்த தரவுகளை வெளியிடுகின்றனர். இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. நாட்டின் 75 வீதமான ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவையாக இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு மற்றும் நாட்டின் தற்போதைய நிலை, அரசாங்கத்தின் செயற்பாடு, விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்த உடன்பாடு என்பவற்றில் தோன்றியுள்ள சிக்கல்கள் குறித்து விளக்கமளித்த சந்திரிகா அடிப்படைவாதிகள் பொதுக்கட்டமைப்பை எதிர்த்தாலும் அதனை தான் கைவிடப் போவதில்லை என்ற தனது அண்மைய பல்லவியை மீண்டும் பாடியுள்ளார்.

## சனாதிபதித்தேர்தல் எப்போது; சந்தர்ப்பம் வரும்போது வெளியிடுவேன்

### - தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி தேர்தல் எப்பொழுது நடக்கும் என்ற திகதியை சந்தர்ப்பம் வரும்பொழுது வெளியிடுவேன். அதுவரைக்கும் என்னால் எதுவும் கூறமுடியாதென தேர்தல் ஆணையாளர்நேற்றுமுன்தினம் அறிவித்தார். அடுத்துவரும் சனாதிபதித் தேர்தல் நடக்கும் நாளை தெரிவிக்கும்படி கேட்டகேள்விகளுக்கு இந்தப் பதிலை அவர் கூறி யுள்ளார். இரண்டொரு வாரங்களில் சனாதிபதித் தேர்தல் நடக்கும் நாளை அறிவிக்கப்போவதாக அவர் தெரி வித்ததுடன், சனாதிபதித்தேர்தல் சம் பந்தமாக பிணக்குகள் இருந்தால் இது நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட வேண்டிய விடயம் என அவர் தெரி வித்துள்ளார்.

### கொழும்புத் தளபதியாக மேஜர் ஜெனரல் வஜிர

(கொழும்பு)

கொழும்புப் பிரதேச சிறிலங்கா இராணுவப் பாதுகாப்புத் தளபதியாக மேஜர் ஜெனரல் வஜிரவிஜயதுங்க வர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அப்பதவியில் இருக்கும் பி.சந்திரவன்ச இராணுவக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# சிறிலங்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியா எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை

## -பாதுகாப்பு அமைச்சு பிரணாப் முகர்ஜி

இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்திருக்கிறார். இந்திய மாநிலங்கள் அவையில் நேற்றுமுன்தினம் எழுத்து மூலமாக அளித்த பதிலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா சிறிலங்காவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாக சிறிலங்கா அரசு தெரிவித்த யோசனையை இந்திய மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்திய இராணுவ பயிற்சி நிலையங்களில் சிறிலங்கா இரா[illegible]ணுவத்தினருக்கு பயிற்சி அளி[illegible]பட்டு வருகின்றது.

இந்த ஒப்பந்தத்தில் கடற்பகுதிகளில் கூட்டுக் கண்காணிப்பு உட்பட பிற ஒத்துழைப்புக்களும் அடங்கும் எனவும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். அதேவேளை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோ இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை அண்மையில் சந்தித்தபோது இந்தியா சிறிலங்காவுக்கு இராணுவ உதவி செய்யாது. அத்து[illegible]ன் சிறிலங்காவுடன் இராணுவக் கூ[illegible]டு ஒப்பந்தத்தை செய்து கொள்ளாது என தமக்கு பிரதமர் உறுதி அளித்துள்ளதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளருக்கெதிராக நேற்று மேர்வின் சில்வாவின் ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பின் தனியார் ஊடக தலைமையகம் ஒன்றின் முன்னால் நேற்று பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் எனக்கூறப்படுவோர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

அண்மையில் மேர்வின் சில்வா ஊடகங்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆரப்பாட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே இன்றைய ஆரப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

# இராணுவத்துள் மாற்றங்களை ஏற்படுத்தவல்ல நிலையில் விடுதலைப் புலிகள் இன்று உள்ளனர்

## -தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சீற்றம்

தமிழீழ விடுதலைப்புலிகளால் சிறிலங்கா இராணுவத்திற்குள்ளேயே மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய நிலை இன்று ஏற்பட்டிருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகத்தின் புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் நாயகமான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரன அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், அவர் தூதரக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

2002 பெப்ரவரி 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் சிறிலங்கா இராணுவத்தினரின் தலையெழுத்து எவ்வாறு மாறியுள்ளது என்பதனை ஹெந்தவிதாரனவிற்கு ஏற்பட்ட இந்த ஒரு சம்பவத்தை வைத்துப் புரிந்து கொள்ளலாம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டாலும் சமாதானத்தின் நிழல் கூட சிறிலங்காவில் கண்ணுக்குத்தெரியும் தூரத்தில் இல்லை.

அதற்குப் [illegible]திலாக தெரிவது விடுதலைப்புலிக[illegible] இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதே யாகும். சர்வதேச சமூகத்தினர் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதன்மூலம் அவர்கள் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்கின்றனர். ரணிலின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் இன்று சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இராணுவப்புலனாய்வுப்பிரிவுத் தலைவருக்கு நாட்டை விட்டுச் செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தும் நிலை வரை வளர்ந்துள்ளது.

இன்று விடுதலைப்புலிகள் தங்களின் தேவைகளுக்கேற்ப பாதுகாப்புப்படையினரை ஆட்டி வைப்பதனை இப்போது நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. கடற்படையின் முன்னாள் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவை அவர் வகித்த பதவியிலிருந்து விலக்கி கொழும்பிற்கு அழைத்ததும் விடுதலைப்புலிகளின் தேவைகளுக்காகவே என்பதே இப்போது தெளிவாகிறது.

சிறி.சு.கட்சி, ஐ.தே.கட்சி விடுதலைப் புலிகளின் தளத்திற்கு ஆடும் பொம்மைகள் என்ற நிலையை அடைந்திருப்பதை நாம் இதன்மூலம் தெரிந்துகொள்ளலாம். இந்த நடவடிக்கைகளைத் தோற்கடிக்க நாம் முன்வராவிடில் இன்னும் சில வருடங்களில் விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக மாபெரும் யுத்தத்தை ஆரம்பித்தால் அதற்கு முகம் கொடுக்கக் கூடிய வகையிலான இராணுவமொன்று நாட்டில் இருக்காது என்பது சந்தேகத்திடமில்லாது தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் தாளத்திற்கு ஆடும் இந்தப் பொம்மை அரசியலைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்று திரளவேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## -இருபது மரணதண்டனைத் தீர்ப்பு-

# நிறைவேற்ற சனாதிபதியின் அனுமதிக்கு அனுப்பி வைப்பு

சிறிலங்காவில் 20பேருக்கான தூக்குத்தண்டனையை நிறைவேற்ற சனாதிபதி சந்திரிகாவுக்கு பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐந்து வழக்குகளில் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்ட சுமார் 20 பேருக்கான தண்டனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இவர்களின் தண்டனையை நிறைவேற்ற சிறிலங்காவின் பிரதம நீதியரசரின் அனுமதியுடன் நீதியமைச்சினூடாக சிறிலங்கா சனாதிபதிக்கு பரிந்துரை செய்திருப்பதாக அந்த அதிகாரிகள் கூறினர்.

ஹோகந்தர கொலைச்சம்பவம் சதீப லக்சான் சிறுவன்கொலை,ரீட்டா ஜோன் கொலை, இனோகா செவ்வந்திகொலை மற்றும் கிருசாந்தி குமாரசாமி கொலை ஆகிய ஐந்து வழக்குகளில் இவ்களுக்கு தணடனை வழங்கப்பட்டுள்ளது.

சுங்கஅதிகாரி சுஜித் பிரசன்ன பெரேராவின் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றுவது சம்பந்தமாகச் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தண்டனையை செயற்படுத்துமாறு தெரிவித்து சட்டமா அதிபர் அந்தந்த குற்றவாளிகள் சம்பந்தமாக ஆவணங்களை அனுப்பிவைப்பார் என்றும் பின் பிரதம நீதியரசரின் கருத்துக்களையும் பெற்று அனைத்து தகவல்களும் அடங்கிய அறிக்கை சனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கவுள்ளதாகவும் நீதியமைச்சர் டபிள்யு .டி. ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

மரண தண்டனை நிறைவேற்றுவது தொடர்பாக தன்னிடம் 12 பேரின் ஆவணங்கள் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் எனினும் அவர்களின் பெயர்களை வெளியிடமுடியாதெனத் தெரிவித்தார்.

# சு.கட்சியின் சனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நியமனம்

## -உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் சிறிலங்கா அமைச்சரவைப்பேச்சாளர் நிமல் சிறிபால டிசில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சனாதிபதித்தேர்தல் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தான் நடைபெறும் என்றும் 2005 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறாது என்றும் நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷவை 62 உறுப்பினர்கள் ஆதரித்திருந்தனர்.

சனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளதால் அனுரா பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியின் பிரதமருக்கான வேட்பாளராகக் கூடும் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மட்டு. கல்வியியற்கல்லூரி மாணவனைக் காணவில்லை

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்குச் சென்ற ஆசிரிய மாணவனைக் காணவில்லையென இவருடைய சகோதரர் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்

கடந்த ஒன்பதாம் திகதி வீட்டில் இடம்பெற்ற நிகழ்வு [illegible]ன்றில் கலந்து கொள்வதற்காக [illegible]க்களப்பில் இருந்து யாழ்ப்பாண[illegible] வந்த இவர் மீண்டும் கடந்த 18 [illegible]ம் திகதி மட்டக்களப்பிற்கு திரும்பிச் சென்றார். இவர் இன்றுவரை கல்வியியற் கல்லூரியை வந்தடையவில்லையென மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளதாகவும் இம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் நவக்கி[illegible]யைச் சேர்ந்த குணரெட்னம் இராஜ[illegible]ன் (வயது-21) என்பவரையே காணவில்லையென சகோதரர் முறைப்பாடு செய்துள்ளார்.

### ஈ.பி.டி.பி....

இவரைச்சுட்டுக்கொன்று விட்டு தப்பியோடியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத் திலிருந்து சுமார் 200மீற்றர் தூரத்தினுள் இராணுவக்காவலரண் ஒன்று இருப்பதும்,மிகவும் சனநெருசல் உள்ள இடத்தில் இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.இவருடன் இணைந்து தினமுரசு பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த மற்றொருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேறகொண்டபோதும் அவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் சம்பவத்தை நேரில்கண்டோர் கூறினர். சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி நிக்ஸன் காங்கேசன்துறை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், வடமராட்சி குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

மேற்படி சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் பருத்தித்துறை பிரதேசசபை தேர்தலில் ஈ.பி.டி.பியினரின் வேட்பாளராக போட்டியிட்டமையும் கடந்த வாரமே வடமராட்சி மந்திகையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி தேச விரோதிகளின் முகாமிலிருந்து யாழ். ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் தலைமைப் பணிமனைக்கு மாற்றலாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

சம்பவம் [illegible]ம்பெற்றதும் அதிக எண்ணிக்கையான காவல்துறையினரும், இராணுவத்தினரும், ஈ.பி டி.பி. தேசவிரோதக் கும்பலின் உறுப்பினர்களும் குவிந்திருந்தனர். இது சம்பந்தமாக யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி உரிய இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், மரணவிசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார். (33,27,28, கா,தீ)

### தமிழ்...

மன்ற உறுப்பினர்கள் வடகிழக்கு மாகாண தமிழ்முஸ்லிம் பேராளர்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### வவுனியா...

விட்டுதப்பித்துச் சென்றுவிட்டதாக மாவட்ட அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்தார். தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் நான்கு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் காரியாலயத்தில் இருந்தபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் இங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி ஒன்றும் கணினியும் சேதமடைந்துள்ளன. நேற்று வவுனியாவில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்றமையும் அதனைக்குழப்புவதற்கு தீயசக்திகள் முற்பட்டமையும் தெரிந்ததே. (21)

### இலங்கை இன...

பொதுக்கட்டமைப்பானது அமைதிப் பேச்சுக்களில் முக்கிய பங்கு வகிக்கும். அதனால் இந்த பொதுக் கட்டமைப்பு தோல்வியடைய அனுமதிக்கக்கூடாது. இந்தப் பொதுக் கட்டமைப்பை முழு அளவில் செயற்படுத்த சர்வதேச நாடுகள் முழு ஒத்துழைப்பை அளிக்கவேண்டும் என்றார்.

அமெரிக்காவுக்கான சிறிலங்காவின் தூதுவர் பேர்னார்ட் குணதிலக்க பேசுகையில், தமிழர்கள் [illegible]ழுகின்ற இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்திற்கு அனைத்து நிவாரணங்களும் சென்றடைவதில் சிறிலங்கா அரசு முழு அக்கறை காட்டுகிறது என்று கூறினார்.

அமெரிக்க உதவி வழங்கும் நிறுவனமான யு.எஸ் எய்ட்டின்மார்க் வார்ட் உரையாற்றுகையில்,தமிழீழ நிர்வாகப் பகுதிகளில் புனரமைப்பு மேற்கொள்ளுவதற்கு அமெரிக்கச் சட்டங்கள்தடையாக இருந்தாலும் ஐரோப்பிய நாடுகள் அப் பகுதிகளில் புனரமைப்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன என்றார்.

அமெரிக்காவுக்கான நோர்வே தூதுவர் வொலெபேக், சம அளவிலான நிவாரணப் பகிர்வுக்கு ஆழிப் பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு மிகவும் அவசியமானது என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் பேசிய ஓபேர்ஸ்ட் காருண்யன், அருளானந்தம், கஜேந்திர குமார், ஆகியோர் தமிழீழத் தமிழர்களுக்கான ஆழிப்பேரலை உதவிகள் நேரடியாகச் சென்றடைவதற்கான சட்டத்தடைகளை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர்.

### மக்களை..

ஆணைக்குழு இவ் எச்சரிக்கையை விடுத்தது.

கடந்த 18 ஆம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட பொறுப்பதிகாரி றோகித பிரியதர்சன தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ். பொலிஸ்நிலைய அதிகாரிகள் மற்றும் முறைப்பாட்டாளர்கள் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

இதன்போது பொலிசார் மீதான முறைப்பாட்டாளரின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்ட பொலிசார் எதிர்காலத்தில் இப்படியான தவறுகள் இடம் பெறாது என்றும், உறுதியளித்ததுடன் முறையிடவந்தவர் மீதும், தாக்குதல் நடத்தியவர் மீதும், அதனை வேடிக்கை பார்த்த பொலிசார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதனையடுத்து எதிர்காலத்தில் பொதுமக்கள் மீது இத்தகைய கவனக்குறைபாடுகளுடன் பொலிசார் செயற்படக்கூடாது என்றும் மேற்படி சம்பவத்துடன் பொலிசார் மீதும், தாக்குதல் நடத்தியோர் மீதும், பொலிஸ் உயர் பீடம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலிசார் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம். பொதுமக்கள் பாதிக்கப்படும்போது [illegible]னை வேடிக்கை பார்ப்பது பொலிசாரின் கடமை அல்ல என்றும் மனித [illegible]கள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி வலியுறுத்தினர்.(33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.